159

ஜப்பான் வருவானா?

வ. ரா.

தமிழ்ப்பண்ணை

புதிய
கொலம்பியா
ரிகார்டுகளில்

சிவகவி
டாக்கி பாட்டுகள்

M.K. தியாகராஜ பாகவதர் பாடிய

GE. 6107 { நாட்டியக்கலையே
அம்பா மனங்கனிந்து

T.R. ராஜகுமாரி & அமிர்தவல்லி பாடிய

GE. 6119 { உள்ளம் தன்
முருகா முருகா

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.

தற்காலப் பிரச்னைச் சுடர் 4

ஜப்பான் வருவானா?

வ. ரா.

2948
2948
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - FEB 1944
MADRAS
952

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர் :: சென்னை

முதற் பதிப்பு : நவம்பர் 1943

சகல உரிமைகளும்
தமிழ்ப் பண்ணையாருக்கே.

விலை அணா 8.

ஹிந்தி பிரசார பிரஸ்,
தியாகராயநகர், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF ...
1 - FEB 1944
MADRAS

ஜப்பான் வருவானு?

சென்னையில் சங்கு ஊதிற்று என்று கேள்விப் பட்டால் போதும், கொழும்பில் எதிரி விமானங்கள் பறந்து, அவைகளில் இரண்டு சுட்டு வீழ்த்தப்பட்டன என்ற சேதியைப் படித்தாலும் போதும், அந்த பரபரப்பிலே, ஜப்பான் வருவானு என்று ஒருவரை யொருவர் தமிழ்நாட்டில் கேட்டுக் கொள்கிருர்கள். இலக்கண விதிப்படி ஜப்பானியன் படையெடுத்து வருவானு என்று கேட்பதற்குகூட, அவர்களுக்கு அவகாசமும் மனமும் இருப்பதில்லை.

இதற்கு காரணம் என்ன? திகிலும் அறியாமையும் தான் காரணங்கள். என்ன அறியாமை? இந்தியாவை பகைவர்களிடமிருந்து காத்து ரக்ஷிப்பதற்காகவே இந்தியாவில் இருப்பதாகவும் வேறு எவ்வித சுயநலமும் தங்களுக்கு இல்லை யென்றும் அமிரி போன்ற இங்கிலீஷ் பெரியவர்கள் சொல்லி வருகிருர்களே, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அக்கு வேறு ஆணி வேருகப் பிரித்து குலைத்துவிட நான் ஒரு நாளும் இடங்கொடுக்க மாட்டேன் என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி அழுத்தமாக அடிக்கடி சொல்லி வருகிருரே, அப்பேர்பட்ட சாம்ராஜ்யத்தையும் அதன் ஒரு பகுதியான இந்தியாவையும் காத்து ரக்ஷிக்க என்னன்ன ஏற்பாடுகள் எடுத்துக் கொண்டிருக்கிருர்

கள், அவை போதுமானவை தானு என்று இந்தியர்கள் தெரிந்து கொள்ள இடமே இல்லை. இதனுல் உண்டான அறியாமையாலும் அறியாமையின் நேர் சந்ததியான திகிலினுலும், ஜப்பான் வருவானு என்று புலம்புவதைப்போல கேட்கிருர்கள்.

ராணுவ முஸ்தீப்புகள் எல்லாருக்கும் தெரிய முடியுமா என்று கேட்கலாம். முடியாது தான். ஜனப் பிரதிநிதிகளான ஒரு சிலருக்கேனும் தெரிந்திருக்க வேண்டும். நெருக்கடி காலத்தில், அவர்கள் தான் ஜனங்களின் திகிலைப் போக்கி, அவர்களுக்கிடையே நம்பிக்கையையும் தைரியத்தையும் நிலை நாட்ட முடியும்.

ஜப்பானேடு பிரிட்டன் போர் துவக்கும் தருவாயில், சர்ச்சில் 'பிரின்ஸ் ஆப் வேல்ஸூம் ரிப்பல்ஸூம், தக்க தருணத்தில் கிழக்கு சமுத்திரங்களுக்குப் போய்ச் சேர்ந்தன' என்று மிக்க குதூகலத்துடன் பார்லிமென்டில் தெரிவித்தார். அந்த இரண்டு அசுர யுத்தக் கப்பல்களை நொடிப் பொழுதில் ஜப்பான் கடலில் மூழ்கடித்தபின், தக்க தருணத்தில் அவ்விரண்டு கப்பல்களும் வந்து சேர்ந்தன என்று டோக்கியோ ரேடியோவில் கிண்டலாக பேசப்பட்டதாம்.

ஜப்பானுடைய தந்திரமும் போர்த்திரனும் எந்த அளவில் இருக்கின்றன என்பதை தெரிந்துகொள்ள முடியாமல், சர்ச்சில் அவ்வாறு பேசிவிட்டார். கண்ணுன இரண்டு போர்க் கப்பல்கள் நஷ்டமாய் போனதும், இந்தியாவில் ஏகப்பட்ட பரபரப்பு. எப்படிப்

பட்ட ஜப்பான், அதனுல் எது வரையில் செய்ய முடியும், அதன் ஆசை எத்தன்மைத்து என்பவைகளைப் பற்றி, இந்தியாவில் எதுவும் தெளிவாகத் தெரிய வில்லை. சர்ச்சிலின் தாதுபுஷ்டி வாக்கியம் வீணுய்ப் போய் விட்டதே என்று இந்தியர்கள் மனக் கிலேச மடைந்தார்கள்.

'ஒரு வெடிகுண்டு செய்வதற்கு என்ன பணம் செலவாகிறது என்பது உங்களுக்குத் தெரியாது. பணத்தின் அருமை ஜப்பான்காரனுக்கு நன்ருகத் தெரியும். இந்தியாவின் பேரில் படை எடுத்து வருவதில், ஜப்பானுக்கு லாபம் எதுவும் இல்லை. லாபம் எதுவு மில்லாத காரியத்துக்காக, பணம்பெற்ற வெடி குண்டை, புத்திசாலியான ஜப்பானியன், இந்தியாவில் எங்கும் போடமாட்டான்' என்று சென்ற வருஷம் **(1942)** ஜனவரி மாதம் சொல்லிவிட்டு ராஜாஜி டில் லிக்குச் சென்ருர். அவர் போவதற்காகத் தான் காத் துக்கொண்டிருந்தானே என்னமோ, அவர் தலை அந் தப் பக்கம் திரும்பியதும், ஜப்பானியன் விசாக பட் டணத்திலும் காகினடாவிலும் 'பணம் பெற்ற' வெடி குண்டுகளை வீசித் தீர்த்துவிட்டான். இந்த தாது புஷ்டி வார்த்தையைக் கொண்டும் பிழைக்க முடியாது என்று இந்தியர்கள் வருத்தமடைந்தார்கள்.

மேலே சொன்ன இரண்டு இடங்களிலும் ஜப்பா னியன் குண்டு வீசின பிறகு, தென்னிந்தியாவின் கட லோரக் கரையில், போதுமான அளவு ராணுவப் பாதுகாப்பு சாதனம் இருக்கிறதோ, இல்லையோ என்று சந்தேகங் கொண்டு, ஜனங்கள் பீதி அடைந் திருக்கிருர்கள் என்பதை தெரிந்துகொண்டு, இப்

பொழுது வைஸிராயாக இருக்கும் லார்ட் வேவல் (அப்பொழுது சேனாதிபதி), 'தற்காப்பு சாதனங்களை கூடிய அளவு துரிதப்படுத்தி வருகிறோம். ஜப்பானியன் வெடிகுண்டு போடுவதைப் பற்றி கவலைப்படாதேயுங்கள். அவன் பகலிலும் நிலவு இருக்கும் இரவிலும்தான் குண்டு போடுவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறான். மேலும் ராணுவ தளங்களையும் தண்டுகளையும்தான் குறி பார்த்து அடிக்கிறான். குறி தவறி, வேறு இடங்களில், அவன் குண்டு வீசுவதில்லை' என்று ரேடியோ மூலமாக, ஒலிப்பரப்பு செய்து, ஜனங்களுக்கு தைரியம் ஊட்ட முயன்றார்.

ஆனால் ஜப்பான் இந்தியாவின் பேரில் படை எடுத்து வருவானா, வரமாட்டானா என்ற பிரச்சனையை, அவர் மையமாக விட்டுவிட்டார். வெகு விரைவில், ஜப்பான் மலேயா, டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகள், பர்மா முதலிய நாடுகளின் பேரில் படை எடுத்து, அவைகளை, தனது வசமாக்கிக் கொண்டது.

இந்தியர்களின் சந்தேகம் பன்மடங்கு அதிகரித்தது. ஜெனரல் அலெக்ஸாண்டர், பர்மாவில், ஜப்பானுடைய தாக்குதலுக்கு முன்னே, பின்னடைந்து வந்தாலும், தமது சேனையில் பெரும் பகுதியை, இந்தியாவுக்குள் வெகு சாமர்த்தியமாக, கொண்டுவந்து சேர்த்துவிட்டார். ராணுவ சம்பந்தமாக, இதை ஒரு வெற்றியாகத்தான் கருத வேண்டும். ஆன போதிலும், மூலப் பிரச்னை அப்படியேதான் இருந்து கொண்டிருக்கிறது. ஜப்பான் வருவானா என்ற சந்தேகக் கேள்விக்கு, யாரும் பதில் சொல்லவில்லை. ஏன்

சொல்லவில்லை என்ருல் சொல்ல முடியாத காரணத் தால் தான்.

ஜப்பானுடைய ஆசையும் நோக்கமும் இப்படித் தான் இருக்கின்றன என்று நிர்ணயமாக யாராலும் சொல்ல முடியவில்லை. இப்பொழுது மட்டும் சொல்ல முடியுமா என்று கேட்டால், ஒருவாறு யூகம் செய்ய லாம் என்றுதான் சொல்ல முடியும்.

ஒரு நாட்டாரின் ஆசை எப்படி எப்படியோ இருக்கலாம் ; அதை பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு தேவையான அடிவலு அவர்களிடம் இருக்கிறதா என் பதை முதலில் கவனிக்க வேண்டும். எனவே, ஜப்பா னின் தற்போதைய எழுச்சிக்கும் லக்ஷியத்துக்கும் அடிதாங்கியாக இருக்கும் அதன் வரலாற்றையும் ஜப்பான் பூபியின் தன்மையையும் தெரிந்து கொள்ளு வது நல்லது.

2

ஜப்பான், பிரிட்டனைப் போல சிறிய தீவுதான். பிரிட்டனும் ஜப்பானும் ஒரே 'பாயில் படுத்துறங்கின காலத்தில்,' 'கிழக்கித்திய பிரிட்டன்' என்று ஜப்பா னைப் பற்றி, பிரிட்டிஷார் பெருமையாக பேசிக்கொண் டார்கள். தன் வழியைப் பின்பற்றி நடக்கும் மகனை பிரியமாகக் கொண்டாடுவதைப் போல, பிரிட்டன் ஜப்பானை ரொம்பவும் பிரியமாக கொண்டாடிவந்தது.

பிரிட்டனில் இரண்டு சரக்குகள் மலிவு ; இரும் பும் நிலக்கரியும். ஜப்பானில் எரிமலையும் பூகம்ப மும் மலிவு. இவை இரண்டின் மூலமாக எப்பொழுது

விபத்து வருமோ என்று எதிர்பார்த்த வண்ணமாக இருக்க வேண்டியவர்கள் ஜப்பானியர்கள். அவை களின் கொடுமைகளை அவர்கள் சகித்துத்தான் ஆக வேண்டும். சகித்துசகித்து, அவர்களுடைய நெஞ்சு கெட்டிப்பட்டிருக்கிறது. தங்கள் கஷ்ட நிஷ்டூரங் களை, அவர்கள் வெளியே, அந்நியர் யாரிடத்தும் சொல்லிக் கொள்வதே இல்லை. எதையும் ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற சங்கற்பம் கொண் டவர்கள் அவர்கள்.

எனவே ஜப்பானியர்களின் மனதில் இருப்பதை, யாரும் எளிதிலே அறிந்து கொள்ள முடிகிறதில்லை. மனதில் வஞ்சகத்தை வைத்துக்கொண்டு, புன்சிரிப் போடு உறவாடுவதில் அவர்கள் சமர்த்தர்கள் என்று வெள்ளைக்காரர்கள் சொல்லுகிறார்கள். புதிதாகப் பார்க்கும் அந்நியரிடமும் தங்கள் உள்ளத்தை திறந்து காண்பிக்கும் இந்தியர்களைப் போல, உலகத்தில் யாருமே இருக்க மாட்டார்கள். அதிருக்கட்டும்.

இயந்திர நாகரிகம் தோன்றி, வெள்ளைக்கார தேசங்கள் செல்வத்திலும் செல்வாக்கிலும் வெகு விரைவில் விருத்தி யடைவதைக் கண்ட ஜப்பான், தானும் தனது பழைய வாழ்க்கையை உதறித் தள்ளி விட்டு, நவ நாகரிகத்துக்கு ஏற்றவாறு அதைத் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று தீர் மானம் கொண்டது. இதற்கு ஜப்பானுடைய வசதி கள் என்ன ? அது கைக் கொண்ட வழி என்ன ?

ஜப்பான் என்பது ஆதியில் நான்கு தீவுகள் கொண்டது. ஹொக்காய்டோ, ஹான்ஷு, ஷிகோகு,

க்யூஷு என்று நான்கு தீவுகள். இவைகள்தான் ஆதி ஜப்பான். இதன் விஸ்தீரணம் 1,47,611 சதுர மைல்கள். இவைகளை ஆண்டுவந்த அரசனுக்கு மிக்காடோ என்று பெயர். இவர் பெயருக்குத்தான் அரசனுக விளங்கினர். உண்மையான அரசியல் அதிகாரம் முழுதும் ஷோகன் என்பவரிடம் தான் இருந்தது. ஷோகன்கள் காலத்தில், உள்நாட்டு சண்டைகளுக்கு குறைவில்லை. ஆனல், ஜப்பானுக்கு வெள்ளைக்காரர்களால் ஆபத்து நேரலாம் என்று தோன்றியதும், ஷோகன்கள் மறைந்து போனர்கள். 1868-ம் வருஷத்தில் புதிய அரசியல் முறை கையாளப்பட்டது. அரசியல் முறை பிரிட்டனைப் போலவே.

தொழில் ஆதிக்கத்தால், வெள்ளைக்கார நாடுகள் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகின்றன என்று கண்டு கொண்ட ஜப்பான், தானும் அம்மாதிரி முன்னேற வேண்டும் என்று தீர்மானங் கொண்டது. சுமார் பத்தில் ஒரு பங்கு பூமிதான் பயிர்ச் செலவுக்கு லாயக்காக உள்ளது. ஜப்பானின் ஜனத்தொகையோ, 7¼ கோடிக்கு அதிகமாகப் பெருகி விட்டது. இந்தப் பெருக்கம் தொழில் அபிவிருத்தியின் விளைவுதான்.

அந்நியர்கள் யாரையும் உள்ளே விடலாகாது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த ஜப்பானில், காம்மடோர் பெர்ரி என்ற அமெரிக்கர், தமது கப்பல்களோடு, பலவந்தமாக, வந்து இறங்கினர். ஜப்பானேடு அமெரிக்காவுக்கு வியாபார வசதிகள் வேண்டும் என்ருர். பெர்ரி கேட்ட தொனி மறுக்க முடியாத தொனியாக இருந்தது. நவ நாகரிக முறையில் தற்காப்பு சாதனங்களை தான் தேடிக் கொண்டா

லொழிய, அடிமைப்பட்டு போகவேண்டி வரும் என்று ஜப்பான் கண்டு கொண்டது.

ஜப்பானியன் எவனும் கடல்தாண்டி, அந்நிய நாட்டுக்கு போகக் கூடாது என்று இருந்த சட்டம் ரத்து செய்யப்பட்டது. ஜப்பானிய இளைஞர்கள் நூற்றுக் கணக்கில், வெள்ளைக்கார நாடுகளுக்கு கல்வியை நாடிச் சென்றார்கள். அவர்கள் தேர்ச்சி பெற்று ஜப்பானுக்கு திரும்பி வந்ததும், நாடு முழுதும் தொழில் சாலைகள் முளைத்து விட்டன. மீன் பிடித்தலையும் விவசாயத்தையுமே நம்பி வாழ்ந்த ஜப்பானியன், தொழில் சாலைகளிலிருந்து கருமேகங்களைப் போல் எழுந்த புகையைக் கண்டதும் குதூகல மடைந்தான். வேலையில் அவனுக்கு வழக்கமாயிருந்த உற்சாகம் இரட்டிப்பு மடங்கு அதிகரித்தது என்று சொல்லலாம்.

ஜப்பானுக்கு பிரிட்டன்தான் எல்லா விஷயங்களிலும் குரு ஸ்தானம் பெற்றிருந்தது. பஞ்சு விளையாத பிரிட்டனில் ஆலைகளில் துணி நெசவாகிற பொழுது, ஜப்பானில் அவ்வாறு ஏன் செய்யக்கூடாது என்று ஜப்பானியன் எண்ணினான். துணி ஆலைகளை ஏற்படுத்திக் கொண்டான். அதாவது, ஜப்பானில், மூலப் பொருள்களுக்கு வசதி யில்லாத தொழில்களைக் கூட மேற்கொள்ள அவன் துவக்கினான்! ஜப்பானியன், துணி நெய்தானே அதை சீனாவில் கொண்டு போய் விற்றான். கொள்ளை லாபம் சம்பாதித்தான். அவனுடைய பார்வையே வேறாகிவிட்டது. சாம்ராஜ்யப் பேராசை அவனுடைய கண்ணுக் கெதிரே தாண்டவமாடத் துவக்கிற்று.

தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை ஒன்று வாங்க வேண்டும், இல்லாவிட்டால் பிற நாடுகளை அடிமைப் படுத்தி, அந்நாடுகளிலிருந்து, அவைகளை சட்ட முறைப்படி கொள்ளையடிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். ஜப்பானியனுக்கு எதையும் தானே யோசித்துச் செய்யும் திறமை கிடையாது. பிறரைப் பார்த்து காபி அடித்து, காபி அடித்ததை அசலைக்காட்டிலும் திறமையாகச் செய்வதில் அவன் சாமர்த்தியசாலி. தொழிலபிவிருத்தி விஷயத்தில், அவன் பிரிட்டனைப் பார்த்து காபி அடித்தான்.

சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகளிலிருந்து, மூலப் பொருள்கள் எளிதில் பிரிட்டனுக்கு வருவதைக் கண்ட ஜப்பான், தனக்கும் அத்தகைய சாம்ராஜ்யம் இருந்தால் நல்லது என்ற முடிவுக்கு வந்தது. மேலும், சீனுவை, 'செல்வாக்குப் பிராந்தியங்கள்' என்ற மரியாதைப் பெயரோடு, வெள்ளைக்கார நாடுகள் கூறு போடப் பார்ப்பதை, ஜப்பான் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது. சீனுவின் கதி தனக்கும் நேரப்படாது என்ற எண்ணத்தை கைக்கொண்டு, தொழில் அபிவிருத்தியோடு ராணுவ முஸ்தீப்புகளையும் கைக்கொள்ள வேண்டும் என்றும் ஜப்பான் தீர்மானங் கொண்டது.

எனவே, தொழில் அபிவிருத்தியும் ராணுவ முஸ்தீப்புகளும் ஜோடியாக நடைபெற்று வந்தன. கடற்படை பயிற்சியில், ஜப்பான் பிரிட்டனுடைய உதவியை நாடிற்று; ராணுவ பயிற்சியில், ஜெர்மனியின் ஒத்தாசையை நாடிற்று. இரண்டு வகைகளிலும் சிறிது வலுப் பெற்றதும், ஜப்பான் சீனுவின் பேரில்

பாய்ந்து, அதை சுளுவிலே தோற்கடித்து அதனிட மிருந்து பார்மோஸா என்ற தீவைத் பிடுங்கிக் கொண்டது.

அந்தக் காலத்தில், ஜப்பான் பிரிட்டனைத்தான் எல்லா விஷயங்களிலும் பின் பற்றி வந்தது. காரணம் ஒன்றே ஒன்றுதான். உடலை வலுப்படுத்திக் கொள்ள ஆசைப்படுபவன் மோட்டாரை நிறுத்தின, மார்பில் கல்லை வைத்து உடைத்த, இரும்புச் சங்கலியை அறுத்த ராமமூர்த்தியைப் போல தானும் ஆகவேண்டும் என்று எண்ணுவது இயற்கை தானே ?

3

சென்ற 150 வருஷங்களாக, உலகத்தில் பேராதிக்கம் பெற்று விளங்கிவந்தது பிரிட்டன்தான். உலகத்தின் ஐந்திலொருபாகம் தனக்கு சொந்தம் என்று பிரிட்டன் சொல்லிக்கொண்டு வந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில், சூரியன் ஒருபொழுதும் அஸ்தமனம் ஆவதில்லை என்றும் பிரிட்டிஷார் பெருமையாகப் பேசிக் கொண்டார்கள்.

பிரிட்டிஷ் 'யூனியன்ஜாக்' கொடி, உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பறப்பதையும் பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்கள் எழுகடல்களிலும் தங்கு தடையின்றி ஓடிக்கொண்டிருப்பதையும் இங்கிலீஷ்காரனுக்கு எந்த இடத்திலும் அபரிமிதமான செல்வாக்கு இருப்பதையும் நேரில் பார்க்கும் ஜப்பான், பிரிட்டனைப்போல தானும் ஆகவேண்டும் என்று ஆசைப்படுவது இயற்கைதானே ?

இந்த ஆசைக்கு, பிரிட்டனுடைய அந்நிய நாட்டுக் கொள்கை பக்கபலமாக நின்று, அதை மிகுதியும் தூண்டிற்று. பிரிட்டனுடைய அந்நிய நாட்டுக் கொள்கையை, ஆராய்ந்துபார்த்தால், அது விநோதமா யிருக்கும்.

பிரிட்டிஷ் 'அரண்மனை'க்கு எதிர்மனை தோன்றும் படியாக, பிரிட்டனுடைய அந்நியநாட்டு மந்திரிகள், விடுவதே இல்லை. பிரிட்டன் அலைகளை ஆளுகின்றது என்பது பிரிட்டனுடைய பிரதாப விருது. எனவே, 'எதிர்மனை' தோன்றவே கூடாது என்பது அதன் சூக்ஷுமமான முடிவு.

நெப்போலியன் காலத்தில், பிரான்ஸ், பிரிட்டிஷ் 'அரண்மனை'க்கு 'எதிர்மனை' கட்டமுயன்றது. இப்பொழுது ஹிட்லர், ஐரோப்பாவில் பெரும்பகுதியை ஜெயித்திருப்பதுபோல, நெப்போலியனும் செய்தார். பிட் என்ற பிரிட்டிஷ் பிரதம மந்திரி, ஐரோப்பாவில் பல நாடுகளைச் சேர்த்துக்கொண்டு, நெப்போலியனை தரைமட்டப் படுத்தினர். நெப்போலியனுக்கு, கடலிலும் தரையிலும் படுதோல்வி. நெப்போலியனை கைது செய்து, ஸெண்ட் ஹெலினு தீவில் கொண்டுபோய் வைத்தார்கள் பிரிட்டிஷார்கள். அக்காலத்தில், பிரிட்டனுக்கு துணையாக நின்றது ஜெர்மனி.

மூன்ருவது நெப்போலியன் காலத்தில், ஜெர்மனி அதன் அசுர பிரதம மந்திரி பிஸ்மார்க்கின் தந்திரத்தால், பிரான்ஸின் பேரில் பாய்ந்த பொழுது, பிரிட்டன் சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது மல்லாமல், பிஸ்மார்க்கின் துராக்கிரக ஆக்கிரமிப்பை ஆதரித்ததைப்போல, சமிக்கிளையும் செய்தது. பிரிட்

டனுடைய அப்போதைய அந்நிய நாட்டுக் கொள்கை மிகவும் தவருனது. பிராங்கோ–ஜெர்மன் போரின் விளைவு என்ன ? ஜெர்மனி, வல்லரசு பதவியை வெகு விரைவில் அடைந்து விட்டது.

பரமசிவனை நோக்கி தவம் கிடந்த அரக்கன், பரம சிவனுரிட மிருந்து வரத்தைப் பெற்றதும், அவருடைய தலையிலேயே கைவைக்க எண்ணினுன். அதைப் போலவே பிரிட்டனுடைய அந்நியநாட்டுக் கொள்கையால், முன்னுக்குவந்து வல்லரசு பதவியைப் பெற்ற ஜெர்மனி, எல்லாத் துறைகளிலும் பிரிட்டன், ஜெர்மனிக்கு அடுத்தபடியாகத்தான் இருக்கவேண்டும் என்ற பேராசை கொண்டு, பிரிட்டனைப் பலவகைகளிலும் மட்டப்படுத்த முயன்றது. இந்த முயற்சியின் பயன் தான் சென்ற உலக மகாயுத்தம்.

ஆஸ்டிரியா, இத்தாலியை அடிமைப் படுத்தி கொடுமை செய்து வருகின்றது என்ற காரணத்தைச் சொல்லி, இத்தாலி, ஆஸ்டிரியாவின் பிடிப்பினின்றும் விடுதலை பெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் பிரிட்டன் கைக் கொண்டு, இத்தாலிக்கு உதவி செய்தது. அது, இந்தப் போரில் விபரீதமாக, பலன் கொடுத்தது. முஸ்ஸோலினி, இத்தாலியின் அதிகாரம் பெற்று ஆக்ஷி நடத்த துவக்கினது முதல், பிரிட்டனிடம் அந்தப்பேர்வழி பகைமை மனப்பான்மையைக் காண்பித்துக் கோண்டே வந்தார்.

இத்தாலியின் சுதந்திரத்தின் பொருட்டு, அதற்கு உதவி செய்ய வேண்டியதுதான். ஆனுல், உதவி செய்தது, ஆஸ்டிரியாவின் கொட்டத்தை அடக்குவதற்காகத்தான். ஆஸ்டிரியாவின் கொட்டத்தை

அடக்கினது, வேறொரு தீமையை உண்டாக்கி விட்டது. ஆஸ்டிரியாவைக் கண்டு, லேசாக பயந்து கொண்டிருந்த ரஷ்யாவை, தண்ணீர் தெளித்து விட்டதைப் போல ஆயிற்று.

ரஷ்யா, கிழக்கேயும் மேற்கேயும் தனது எல்லையைத் தள்ளிப்போட ஆரம்பித்தது. ஆசியாவில், இந்தியாவுக்கு வெகு சமீபத்தில், ரஷ்யா தன் எல்லையைக் கொண்டுவந்து விட்டது. பாரசீகத்திலும் நுழைந்து, தன் செல்வாக்கை விருத்தி செய்ய முயன்றது. சீனுவுக்குள் பிரவேசித்தும், தன் கை வரிசையைக் காண்பித்தது. சீனுவிலும் தன் செல்வாக்கை ரஷ்யா நிலைநாட்ட முயலுவதை ஐப்பான் பார்த்தது. அதற்கு ஆத்திரம் பொங்கி வழிந்தது.

இதற்கு சிறிது காலத்துக்குமுன், ஜப்பான் அமெரிக்காவோடு, உறவு ஒப்பந்தம் செய்து கொள்ள முயன்றது. அமெரிக்கா சம்மதிக்கவில்லை. இந்தக் காலம்தான், ரஷ்யா தனது ஆதிக்கத்தை, ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் வலுப்படுத்த முயன்ற காலம்.

ஆசியாவில், ரஷ்யாவுக்கு எதிர் முட்டுக்கொடுக்க, பிரிட்டனுக்கு காவல்காரனைப் போல ஒரு நாடு இருந்தால் நல்லது என்று பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் எண்ணினுர்கள். இந்த எண்ணத்தின் பயன்தான் ஆங்கிலோ-ஜப்பானிய ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்தை, ஜப்பான், தனக்கு பரிபூரணமாக சாதகப்படுத்திக் கொண்டது. மஞ்சூரியாவில், ரஷ்யா ரயில் போட்ட பிறகு, ஜப்பான் அதற்கு மேல் பொறுத்துக் கொண்டிருக்க மனம் கொள்ள

வில்லே. ஜப்பான், ரஷ்யாவின் பேரில் போர் தொடுத்தது. மஞ்சள் நிறக்குள்ள ஜப்பானியனே ஆறடிக்கு மேலிருக்கும் ஆஜானுபாகுவான வெள்ளை நிற ரஷ்யன் பந்தாடி விடுவான் என்ற எண்ணத்தில் உலகம் ஆழ்ந்து கிடந்தது.

ஜப்பான் ரஷ்யாவை, இந்த போரில் வெருட்டி வெருட்டி அடித்து விட்டது. ரஷ்யக் கடற்படையை, இருந்தவிடம் தெரியாமல், பாதாளத்துக்கு அனுப்பி விட்டது. இந்த யுத்தத்தில், பிரிட்டன், நடு நிலைமையில் இருப்பதாக பாவனை செய்து, எந்தந்த வகைகளில் ஜப்பானுக்கு உதவி செய்ய முடியுமோ, அவ்வளவையும் செய்தது. ஜப்பான், ரஷ்யாவின் முதுகெலும்பை முறித்து விட்டது என்று பிரிட்டன், அதைத் தட்டிக்கொடுத்து, தானும் சந்தோஷ பட்டது.

ஜப்பானுக்கு உலக வல்லரசு பதவி கிடைக்கும்படியாகச் செய்தது பிரிட்டன். இன்றைக்கு ஜப்பான், பிரிட்டனேடு யுத்தம் செய்வ தென்ருல், அது வளர்த்த கடா மார்பில் பாய்ந்த சங்கதிதான்.

பிரிட்டனுடைய தவருன அந்நிய நாட்டுக் கொள்கை, இதோடு நின்றதா ? இல்லே. கொள்ளைக்கார முஸ்ஸோலினி, அநியாயமாக அபிஸீனியாவில் ஆக்கிரமித்த பொழுது, அப்பொழுது பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியாக இருந்த ஹோர் என்பவர் பிரஞ்சு லவாலோடு சேர்ந்து கொண்டு, முஸ்ஸோலினியை திருப்தி செய்யப் பார்த்தார். இதைக்கண்டு, பிரிட்டிஷ் பொதுமக்கள் மிகவும் ஆத்திரப்பட்டார்கள். ஹோர், பதவியை விட்டு நீங்கினுர்.

நடுநிலைமை தாங்கும் எல்லா நாடுகளும் (யுத்தத் துக்கு போகாமல்) இத்தாலியோடு, எல்லாத் துறை களிலும் கூட்டுறவை அறுத்துக் கொள்ள வேண்டும் என்று பிரிட்டிஷ பார்லிமென்டில் ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது. இந்த பிரயத்தினத்தில் கலந்து கொள்ள, ஜெர்மனி மறுத்து விட்டது; ஜப்பான் மறுத்து விட்டது. அமெரிக்கா 'வாசா கைங்கரியம்' செய்தது. பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி அமு லுக்கு கொண்டுவர முயன்ற இந்த 'ஸாங்ஷன்ஸ்' ஏற்பாடு மண்ணை கவ்வி விடவே, உலகம் பிரிட்டிஷ் அந்நிய நாட்டுக் கொள்கையின் பல வீனத்தையும் தவறையும் தெளிவாக தெரிந்து கொண்டது.

4

இது இப்படி இருக்க, ரஷ்ய-ஜப்பானியப் போ ருக்குப்பின், ஜப்பான் எந்த நிலைமையில் இருந்தது என்பதைப் பார்ப்போம். இதற்கு முன், இன்னொரு விஷயத்தையும் சொல்லவேண்டும்.

உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் வெள்ளைக் காரர்களின் ஆதிக்கம் வலுத்து வருவதைப் பார்த்து, வெள்ளையரல்லாத மற்றவர்கள் திகிலடைந்தார்கள். வெள்ளைக்காரர்களை யாருமே வெல்லமுடியாதோ என்று எண்ணி, ஏக்கம் அடைந்தார்கள். ஜப்பான், ரஷ்யாவை, 'பீட்' அடித்ததைப் பார்த்ததும், வெள்ளை யரல்லாதவர்களின் உள்ளங்களில் ஒரு வித எழுச்சி உண்டாயிற்று. ஜப்பானியன் தங்கள் இனத்தைச் சேர்ந்தவன் என்று எண்ணி, அவனைப்பற்றி, பெருமை யாகப் பேசிக்கொண்டார்கள்.

ஆனல், ஜப்பானுடைய உண்மையான உள்ளக் கிடக்கை அவர்களுக்கு தெரியவில்லை. தெரியாததனுல், ஆசியாவின் விடுதலைக்காக கடவுளால் அனுப்பப்பட்ட தேவதூதன் ஜப்பான் என்று ஆசியாக் காரர்கள் எண்ணினர்கள். அப்பொழுது, இந்தியர்களுக்கு ஜப்பானிடம் ஒரே மோகம்! எதற்கெடுத்தாலும், ஜப்பானைப் பார் என்று தலைவர்களும் அறிஞர்களும் பிரசங்கம் செய்தார்கள்.

ஜப்பானுக்குப் போய்த் திரும்பிய இந்தியர்கள், அந்த நாட்டை ஒரேடியாக வர்ணிக்கத் துவக்கி விட்டார்கள். அவர்களுடைய வர்ணனையில் ஒரு 'சாம்பிள்'—'உதய சூரிய தேசத்தை (ஜப்பானை)ப் பார்க்காத கண்கள் இருந்தென்ன? இல்லாமல் போனல் என்ன? இயற்கையின் வனப்பு அவ்வளவும் திரண்டு உருக் கொண்டது போல் இருக்கிறது அந்த நாடு. செடி கொடிகள் செழித்திருக்கும் தேசம்! குன்றுகளில் தவழ்ந்து படர்ந்து நிற்கும் ஏரிகளின் காக்ஷி கண் கொள்ளாக்காக்ஷி. எரிமலை, குழம்பைக் கக்கினல் என்ன? பூகம்பத்தால் பூமி அதிர்ந்தால் என்ன? அங்கே, மலர்கள் வாடுவதில்லை; குழந்தைகள் அழுவதில்லை; பெண்கள் புன் சிரிப்பு சிரிப்பதே இல்லை. ஜப்பானியன் உழைப்பின் திருவவதாரம்; ஊக்கத்தின் தங்குமிடம்'.

இவ்வாறெல்லாம், அப்பொழுது ஜப்பானைப் பற்றி புகழ்மாலை! வங்காளப் பிரிவினையால், இந்தியாவில் சுயராஜ்ய இயக்கம் தோன்றியகாலம். இந்திய சுயராஜ்யம் அடையும் முயற்சியில், ஜப்பானுடைய உதவியை கண்டிப்பாக எதிர்பார்க்கலாம்

என்று இந்தியர்களில் சிலர் அளப்பு அளந்து கொண்டிருந்தார்கள். ஆனால் உண்மை வேறு.

இந்திய சர்க்காரின் கோபத்துக்கு இரையாகாமல் தப்பி யோடிய இந்திய தேச பக்தர்கள், ஜப்பானில் மரியாதை யோடும் பிரியமாகவும் நடத்தப் படவில்லை. அவர்களை கண் காணிப்பு செய்து, அவர்களைப் பற்றி, ஜப்பானிலிருக்கும் பிரிட்டிஷ் ஸ்தானீகருக்கு, தகவல் கொடுத்துக்கொண்டு வந்தார்கள் ஜப்பானிய போலீசார். இந்தியாவி லிருந்து பஞ்சு வாங்குவதிலும் தனது தொழில் சாலைகளில் உற்பத்தியாகும் சாமான்களை இந்தியாவில் விற்பதிலும்தான், ஜப்பான் கண்ணும் கருத்துமாக இருந்தது. தனது நண்பன் பிரிட்டனுக்கு, ஆசியாவில் பக்கபலமாகவும் காவல்காரனாகவும் ஜப்பான் இருந்து வந்தது.

ஜப்பானியனைப்பற்றி, ஒன்றுமட்டும் திடமாக சொல்ல முடியும். அவனுடைய ராஜபக்திக்கும், தேச பக்திக்கும், இணையாகச் சொல்லுவதற்கு, உலகில் வேறு யாரும் இல்லை என்றே சொல்லிவிடலாம். நாட்டுக்காக உயிரை விடுவதில், ஜப்பானியனை யாரும் மிஞ்ச முடியாது. ரஷ்யப்போரில் ஜப்பான் வெற்றி பெற்றதற்கு பிரிட்டனின் பணசகாயம் பெரு உதவியாக இருந்தது. தக்க தருணத்தில் தலையிட்டு, அமெரிக்கா, ஜப்பானுக்கும், ரஷ்யாவுக்கும் சமாதானம் செய்து வைத்தது. தனக்கு உதவி செய்த அமெரிக்காவின் பேரிலும் பிரிட்டன் பேரிலும் தான், ஜப்பான் இப்பொழுது பாய்ந்திருக்கிறது. நன்றியை, நாடகத்தில் தான் பார்க்கலாம் போலும்!

ரஷ்யாவைத் தோற்கடித்த உடனடியிலேயே, ஜப்பான் கொரியாவை தன் வசமாக்கிக் கொண்டது. போர்த்திறனிலும் தொழில்களிலும் முன்னேறி வந்த ஜப்பான், வெளியுலகத்தின் பேரில் தனது பார்வையைச் செலுத்தியது. தொழில்களுக்கு தேவையான மூலப் பொருள்களை சுலபமாக அடைவதற்கும் தனது தொழில் சாலை பொருள்களை விற்பதற்கும் நாடுகள் தேவை என்று ஜப்பான் உணர்ந்தது. அதற்காகவே, முதல் ஆக்கிரமிப்பு கொரியா நாட்டின் பேரில். அது முதல், எல்லாத் திசைகளிலும் ஆக்கிரமிப்புத் தான்.

இந்த ஜாப்தாவை, வரிசைக் கிரமமாக கொடுக்க வேண்டிய தேவை இல்லை. பிரிட்டனைப் போல, பரந்த சாம்ராஜ்யம் தனக்கும் வேண்டும் என்று ஜப்பான் தீர்மானம் கொண்டது. சென்ற மகா யுத்தத்தில், ஜப்பான் பிரிட்டனுக்கு சாதகம். அதனுல், பூமி லாபம் ஏராளமாக கிடைக்கும் என்று ஜப்பான் எண்ணி, ஏமாந்து போயிற்று. கொஞ்சம்தான், ஜப்பானுக்கு கிடைத்தது.

வார் சேல்ஸ் உடன்படிக்கைக்கு கர்த்தா, 'புலி' க்ளெமான்ஸோ என்ற பிரஞ்சு பிரதம மந்திரி. பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாய்ட் ஜ்யார்ஜின் ஜபம், 'புலி'யினிடம் பலிக்கவில்லை. 'புலி' சொன்னதற்கு, லாய்ட் ஜ்யார்ஜ் 'ஆமாம் ஆமாம், கேடி கேடி' போடவேண்டிய தாயிற்று. ஜனநாயகத்தை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காக போரில் அமெரிக்காவை இறங்கச்செய்த அதன் தலைவர் உட்ரோவ் வில்ஸன், தமது பதினுன்கு நிபந்தனைகளையும் தூக்கிக்கொண்டு, அமெரிக்காவி

லிருந்து பாரிஸ் நகரத்துக்கு சென்ருர். அவைகள் குப்பைத் தொட்டிக்கு லாயக்கு என்பதைப் போல, 'புலி' நடந்துக் கொண்டது. வில்ஸன் மனம் உடைந்து அமெரிக்காவுக்கு திரும்பிப் போனுர்.

வார்சேல்ஸ் உடன்படிக்கையால், பூமிலாபம் கிடைத்தது பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் தான். ஏமாந்துபோன நாடுகள் ஜப்பானும் இத்தாலியும்.

ஜப்பானியன் அமெரிக்காவிலும் ஆஸ்டிரேலியா விலும் குடியேறக் கூடாது என்று அந்த நாடுகள் தடுத்து விட்டன. எனவே, சிறிது சிறிதாக, ஜப்பான், சீனுவின் பேரில் தன் பார்வையைச் செலுத்திற்று.

ஜப்பானின் முன்னேற்றம் விபத்தாக முடியும் என்று அமெரிக்கா முடிவு கொண்டு, 1922-ம் வருஷம் நடைபெற்ற, வாஷிங்டன் மகா நாட்டில், அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் இவைகளுடைய கடற் படைகள் 5-5-3 அளவில் இருக்க வேண்டும் என்றும் வார் ஸேல்ஸ் உடன் படிக்கையின் மூலமாக கிடைத்த மைக்ரனீஷியத் தீவுகளை, ஜப்பான் அரண் செய்யக் கூடாது என்றும் தீர்மானிக்கப் பட்டது.

ஜப்பானுக்கு ஆத்திரம். இந்த ஆத்திரம், ஜெனரல் டனகாவின் மூலமாக வெளித்தோன்றிற்று. இவர் 1927-ம் வருஷத்தில், ஜப்பானுக்கு பிரதம மந்திரியாக இருந்தார். ஜப்பான் உலக ஆதிபத்தியத்தை எப்படி அடையலாம் என்பதற்கு, ஒரு திட்டத்தை வகுத்து, அனத, மிக்கா டோவுக்கு சமர்ப்பித்தார்.

அவர் திட்டத்தின் சுருக்கம் வருமாறு:—"ஜப்பானியர்கள் கடவுளுக்கு உகந்த மக்கள். உலக ஆதிக்

கம், அவர்களுடைய இயற்கையான உரிமை. அதை அடைவதற்குமுன், கிழக்கு ஆசியாவில் ஜப்பானுக்கு சில நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன. அவைகளை போக்க வழி தேடினால், அமெரிக்கா, ஜப்பானுக்கு குறுக்கே நிற்கும். சீனாவை, நமது ஆதிக்கத்துக்குள் கொண்டுவர முயன்றால், நாம் கட்டாயம் அமெரிக்காவை ஒடுக்கியே ஆகவேண்டும்.

"சீனாவை ஜெயிப்பதற்குமுன், மஞ்சூரியாவையும் மங்கோலியாவையும் நமது வசம் கொண்டு வர வேண்டும். சீனாவை, நாம் ஜெயித்துவிட்டால், ஆசியாவின் மற்ற நாடுகள், தாமாகவே, நமது கால்களில் வந்து விழும். பிறகு, நம்மை கிழக்கு ஆசியாவில், யாரும், அசைக்கமுடியாது. சீனாவின் மூலமாக, நமக்கு கிடைக்கும் 'மூலபலங்களை'க் கொண்டு, இந்தியா, பிலிபைன் தீவுகள், டச்சு கிழக்கு இந்தியத் தீவுகள் முதலிய நாடுகளை, நாம் ஜெயிப்போம். பிறகு மத்திய ஆசியா, துருக்கி, ஐரோப்பா. முதலில் நாம் மஞ்சூரியாவையும் மங்கோலியாவையும் பிடித்துக் கொள்ள வேண்டும்."

டனகாவின் திட்டத்தில், இந்தியா இருக்கிறது. ஆனால், சீனாவையும் இந்தியாவையும் பிடிக்காமலே, மேலே குறிப்பிட்ட மற்ற நாடுகள், இப்பொழுது ஜப்பானின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு கிடக்கின்றன.

டனகாவின் சாஸனத் திட்டத்தின் படிக்கு, **1931**-ம் வருஷம் ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கிற்று. விநோதம் என்ன வெனில், பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியாக அப்பொழுது இருந்த ஸர் ஜான்

ஸைமன், இந்த ஆக்கிரமிப்பை, ஆக்ஷேபிக்காதது மல்லாமல், ஆதரவும் காண்பித்தார்.

பல ஆண்டுகளாக, பிரிட்டிஷ் அந்நிய நாட்டுக் கொள்கையால், பிரிட்டன் விரும்பாமலே, எத்தனை விபரீதங்கள் உலகத்தில் தோன்றி விட்டன!

மஞ்சூரியாவைப் பிடித்துக் கொண்டதும், ஜப்பான் வரிசைக்கிரமமாக, சீனுவின் பேரில் தொடர்ந்து ஆக்கிரமிக்க துவக்கியது.

5

இதற்குப் பிறகு, ஜப்பானுக்கு நெஞ்சு துணிவு ஏற்பட்டு விட்டது. வாஷிங்டன் ஒப்பந்தத்தின்படி நடக்க, ஜப்பான் மறுத்துவிட்டது. ஆசியாவுக்கு அதிபன் ஜப்பான் தான்; ஆகவே, சீனுவில், வெள்ளையர் யாரும் ஆதிக்கம் கொண்டாட முடியாது என்று ஜப்பான் முரசு அறிவித்தது. வாஷிங்டன் ஒப்பந்தத்துக்கு மாருக, மைக்ரனீஷியாத் தீவுகளை அரண் செய்தது.

1936-ம் வருஷம் லண்டனில், கடற்படை மகாநாடு ஒன்று நடை பெற்றது. அப்பொழுது, பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் சமமாக, ஜப்பானுக்கு கடற்படை இருக்கவேண்டும் என்று அதன் பிரதிநிதி வேண்டினுர். வேண்டுகோள், மகாநாட்டில் மறுக்கப்பட்டது. உடனே, ஜப்பானில் கொந்தளிப்பு. ராணுவ நபர்கள், அரசியல் நிர்வாகத்தில் ஆதிக்கம் பெற்றுர்கள். இவர்களின் தூண்டுதலால், பழைய மந்திரிகளில் பலர் கொலை செய்யப்பட்டார்கள்.

ஜப்பானுக்கு பிரிட்டன் பேரில் வெறுப்பு உண்டாயிற்று. புதிய நட்பை நாடிற்று. இந்த சமயத்தில், ஹிட்லர் தயாராக காத்துக்கொண் டிருந்தார். ஜெர்மனியோடு ஜப்பான் ஒப்பந்தம் செய்து கொண்டது.

1931-ம் வருஷம், ஜப்பான் டனகாவின் திட்டப்படி, மஞ்சூரியாவைப் பிடித்துக் கொண்டதும், சீனுவின் பேரில் ஆக்கிரமிப்பதுதான் பாக்கி. அதை கிரமமாக செய்யுமுன், *1932*-ம் வருஷத்தில், ஷாங்ஹே நகரைத்தாக்கி, அதன் பெரும் பகுதியைப் பிடித்துக் கொண்டது; ஷாங்ஹேதான் சீனுவின் முக்கியமான துறைமுகம்.

1933-ம் வருஷத்தில், வட சீனத்தின் நுழை வழியான ஷாங்ஹேக்வானே, ஜப்பான் கைப்பற்றியது; பின்னர், ஜிஹோல் மாகாணத்தை பிடித்துக் கொண்டது; பிறகு, வட சீனுவும் ஜப்பான் வசம் போய் விட்டது.

செயல் வல்லமை எதுவு மில்லாத சர்வதேச சங்கம், ஜப்பானின் இந்த ஆக்கிரமிப்புகளைக் கண்டித்து, தீர்மானம் நிறை வேற்றிற்று. இத்தகைய தீர்மானத்தை, சர்வதேச சங்கம் நிறைவேற்றி யிருக்கக் கூடாது என்று ஆக்ஷேபித்து, ஜப்பான், சர்வதேச சங்கத்தினின்றும் விலகிக் கொண்டது. இதற்கப்புறம் தான், ஜெர்மனி யோடு ஜப்பானுக்கு நெருக்கமான உறவு.

1937-ம் வருஷத்தில் தான், ஜப்பான் சீனுவின் பேரில், பெருவாரியான அளவில் படை எடுத்தது. சென்ற ஏழு வருஷங்களாக, ஓயாமல், போர் சீனுவில்

நடந்து கொண்டே இருக்கிறது. சீனச் சேனைகளை நாசமாக்க, ஜப்பானுல் முடியவில்லை. சீனர்கள் ஆங்காங்கு, குரங்குப் போர் நடத்தி, ஜப்பானின் ஜம்பம் சாயாமல் செய்து வருகிருர்கள். சீனுவின் கடலோரப் பிராந்தியம் முழுமையும் ஜப்பான் வசம் போயிற்று. சீனுவுக்குள் வியாபாரப் பொருள்கள் நுழையாமல், ஜப்பான் தடுத்து விட்டது.

இது மட்டுமா? போரில் சம்பந்தப்படாத சாதாரண சீன மக்களின் பேரில், ஜப்பானிய விமானிகள் சரமாரியாக வெடிகுண்டுகளைப் பொழிந்து, அவர்களிடையே திகிலை உண்டாக்கி, அவர்களுடைய எதிர்ப்பு மனப்பான்மையை குலைக்கப் பார்த்தார்கள். வேண்டுமென்றே, நிரபராதிகளான சீனர்களை, வேவு பார்த்தார்கள் என்று பீரங்கிக்கு இரையாக்கினுர்கள். நகரங்களை பாழ் படுத்தி, நாசமாக்கினுர்கள். சீனப் பெண்களை, ஜப்பானியர்கள் கற்பழித்தார்கள். என்ருலும், சீனுவின் எதிர்ப்பின் முதுகெலும்பை ஜப்பானுல் முறிக்க முடியவில்லை.

சீனர்களுக்கு, சியாங்-கே-ஷேக என்ற அற்புதமான தலைவர் தோன்றினுர். அந்த கம்பீரமான புருஷன், ராணுவ நுட்பமறிந்த மேதாவியான சேனுபதி, ஆசியாவின் அற்புதப் புதல்வன் என்று சர்ச்சில் அடுக்கு அடுக்காக அடைமொழிகளைத் தூவி, சீனத் தலைவரைப் புகழ்கின்ருரே, அந்த சர்ச்சில் சீனுவுக்கு எவ்வகையில் உதவி செய்தார்?

பிரிட்டிஷ் சரித்திரத்திலேயே, நெவில் சேம்பர்லேன் மிகப் பலவீனமான பிரதம மந்திரி. ஹிட்லரின் மிரட்டலுக்கு, அவருக்கு 'வாய்க்கட்டை' போட்டு,

அவரைத் திருப்தி செய்தால், பிரிட்டன் போரில் இறங்க வேண்டாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அப்பாவி சேம்பர்லேன் என்று அவர் பெயர் எடுத்தார்.

பிரிட்டனைக் காப்பாற்றிய புண்ணிய மூர்த்தி, பெரியார் என்ற பட்டம் இப்பொழுது, சர்ச்சிலுக்கு, அனுயாசமாக கிடைத்திருக்கிறது. இரும்பு மனிதன் என்று பெயர் எடுத்து வரும் சர்ச்சில் கூட ஜப்பான் சம்பந்தப்பட்ட வரையில், வாய்க்கட்டை வழியை மேற் கொண்டார்.

சீனுவின் கடலோர முழுமையும் ஜப்பான் வசம் போய் விடவே, சீனுவுக்கு போர்த் தளவாடங்களை கொண்டு செல்லுவதற்கு, ஒரே ஒரு பாதைதான் இருந்தது. அதற்கு 'பர்மா ரோடு' என்று பெயர். பர்மா வழியாகச் சென்றதால், அந்தப் பாதைக்கு பர்மா ரோடு என்று பெயர். பர்மா ரோடை, பிரிட்டன் அடைத்துவிட வேண்டும் என்று ஜப்பான் உறுமிற்று.

அமெரிக்கா போரில் இறங்குமா, இறங்காதா என்று சர்ச்சிலால் அப்பொழுது அறிய முடியவில்லை. பர்மா ரோடை மூடினுல், ஜப்பான் திருப்தி அடைந்து, போரில் இறங்காமலிருக்கும் என்று சர்ச்சில் முடிவு செய்து கொண்டது போல, அவர் பர்மா ரோடை மூன்று மாத காலம் மூடி விட்டார்.

வலுவாயனுக்கு வாய்க்கட்டை போடும் சேம்பர்லேன் வழியை, சர்ச்சில் பின்பற்றினது ஆச்சரிய மல்லவா ? சர்ச்சிலுக்கு வெள்ளை நிறத்தவர்களிடம்

தான் அபிமானம். அதனாலேதான், சர்ச்சில், ரூஸ் வெல்ட், ஸ்டாலின் சந்திப்பு என்று பேசப்பட்டு வருகிறதே யல்லாமல், அந்த சந்திப்பில், சீனத் தலைவர், சர்ச்சிலின் பாஷைப்படிக்கு, ஆசியாவின் அற்புத புதல்வன் சியாங்-கே-ஷேக், கலந்து கொள்ளுவார் என்ற வதந்திகூட கிடையாது. நால்வர் மகாநாடு ஏன் கூடவில்லை ?

வெள்ளையர்களுக்கே ராஜ்யம், மற்றவர்களுக்கு அது தியாஜ்யம் என்பது போல காரியம் நடைபெறுகிற தல்லவா ?

சர்ச்சில், சேம்பர்லேனுடைய 'வாய்க்கட்டை வழி' யைப் பின்பற்றி, மூன்று மாதகாலம், சீனுவுக்கு நரக வேதனையை உண்டாக்கி விட்டார். அரக்கன் ஜப்பானியனோடு உறவு கொண்டாடிய சர்ச்சில், நமது அருமை நண்பர் சியாங் என்று வாய் கூசாமல் அழைத்தாரே என்று சாதுக்கள் மனம் வருந்தலாம். ஆனல், அவர்களுக்கு, ராஜ தந்திர நெருக்கடி இன்னதென்று விளங்காது.

டன்கர்க் விபத்து காலத்தில், ஹிட்லரை 'அந்த பைத்தியம் பிடித்த மனிதன்' என்று சர்ச்சில் சொன்ஞர். நேசக் கக்ஷியாருக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்துவரும் இந்நாளில், அந்த அயோக்கியன், அந்தப் பாதகன், அந்த மனிதவர்க்கத்தின் விரோதி என்று சர்ச்சில் ஹிட்லரை, வாய் கூசாமல் அழைக்கிறார். தென்புக்கு தக்கபடிதான் பேச்சும் ராஜ தந்திரமும் தோன்றும்.

ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் நேசமில்லா விடினும், பகைமை இல்லை. ஜப்பானுக்கும் பிரிட்டனுக்கும்

பகைமை. ரஷ்யாவும் பிரிட்டனும் சேர்ந்து ஜெர்மனியை எதிர்த்துப் போராடுகின்றன. இந்த விஞேதத்துக்கு எப்படி வியாக்கியானம் செய்வது? சந்தர்ப்பத்தின் தேவை என்று சொன்னுல், சாதாரண மனிதர்கள், அதை ஏற்கவே மாட்டார்கள்.

பிரிட்டிஷ் தூதர் (சீனுவில் இருந்தவர்) ஜப்பானியர்களால், மெஷின் பீரிங்கியால் தாக்கப்பட்டதை மறந்து, சர்ச்சில், ஜப்பானுக்கு உதவி செய்தார். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கையாளப்படும் ராஜதந்திரப் போக்கின் நுட்பம் சாமான்யர்களுக்கு விளங்காது என்று சர்ச்சில் ஏன் சொல்லமாட்டார் ?

1939-ம் வருஷத்தில் டீன்ஸ்டினிலிருந்த பிரிட்டிஷ் வியாபாரிகளை, ஜப்பானியர்கள் பெரிதும் அவமானப் படுத்திஞர்கள். சேம்பர்லேனுடைய ரத்தம் கொதித்தது. டோக்கியோவில் இருந்த பிரிட்டிஷ் ஸ்தானிகர் இதை, ஜப்பானிய அரசாங்கத்தினிடம் முறையிட்டுக் கொண்டு, ஆக்ஷேபித்தார். எப்படி ஆக்ஷேபித்தார் ? "சீனுவிலிருக்கும் ஜப்பானிய துருப்புகளுக்கு சில பிரத்தியோகமான தேவைகள் உண்டு என்பதை ஒப்புக்கொண்டு" ஆக்ஷேபித்தார். என்ன அபத்தமான, அர்த்தமில்லாத, பயன் தரக்கூடாத ஆக்ஷேபணை !

ராஜ தந்திர பழக்கமில்லாத சாமான்யர்களுக்கு இந்த வாசகம் எப்படி அர்த்தமாகும் !

6

இந்த சமயத்தில், ரஷ்யாவோடு ஹிட்லர், நேச ஒப்பந்தம் செய்து கொண்டார். பிரிட்டிஷ் ராஜ

தந்திரத்தில், இது மிக அவலக்ஷணமான கட்டம். பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ் கக்ஷியாருக்கு, ரஷ்யப் பொது உடமை தத்துவத்தில் வெறுப்பு. போல்ஷிவிஸத்தை உலகில் பரவ விடக்கூடாது என்பது அவர்களுடைய கக்ஷி. ஸ்டாலினுக்கு சம அந்தஸ்து கொடுத்து, அவரோடு பிரிட்டன் பேசவாவது என்று சேம்பர்லேன் எண்ணினுர்.

பிரிட்டிஷ் அந்நிய நாட்டு இலாகாவைச் சேர்ந்த ஸ்ட்ராங் என்ற சாதாரண உத்யோகஸ்தரை, சேம்பர்லேன் மாஸ்கோவுக்கு அனுப்பினுர். ஸ்டாலினுக்கு ஆத்திரம். தன்னையும் ரஷ்யாவையும் மதிக்காத பிரிட்டனேடு உறவாடாவாவது என்று ஸ்ட்ராங்கை அவர் மதிக்கவே இல்லை. ஹிட்லரின் அந்நிய நாட்டு மந்திரி ரிப்பன்ட்ராப் மாஸ்கோவுக்கு விமானத்தில் போய் இறங்கினுர். வெகு விரைவில், ஹிட்லருக்கும் ஸ்டாலினுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது.

பின்னுல், க்ரிப்ஸை மாஸ்கோவுக்கு அனுப்பின புத்தியும் பொறுப்பும் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரிக்கு, அப்பொழுதே இருக்கப் படாதா ? ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால், ஹிட்லர், பிரான்ஸின்மேல் பாயுமுன், நூறு தடவை யோசித்திருக்க மாட்டாரா ?

பிரிட்டிஷ் ராஜ தந்திரத்தின் பலவீனத்தையும் மந்த கதியையும் பற்றி என்ன சொல்லுவது ? 'இங்கே (பிரிட்டனில்) மக்கள் சாம்ராஜ்ய போதையில் மதி மயங்கி, சுக போகங்களில் ஆழ்ந்து கிடக்கின்றனர். பிரிட்டன் இப்பொழுது போரில் இறங்க தயாராய் இருக்கவில்லை' என்று பிரிட்டனுக்கு ஹிட்லரின்

விசேஷ தூதராகச் சென்ற ரிப்பன்டிராப், ஜர்மனி யின் சர்வாதிகாரிக்கு ரிப்போர்ட்டு செய்தாராம்.

வாய்க்கட்டை வழியை சேம்பர்லேன் நாடுகிருர் என்ருல் அது பலவீனத்துக்கு அடையாளம் என்று ஹிட்லர் கொள்ள மாட்டாரா? அதோடு, ரிப்பன் டிராப்பின் ரிப்போர்ட்டும் சேர்ந்து கொண்டால், 'பொன்மலர் நாற்றம் உடைத்து' என்பது போலத் தான். இதன் பின், ஹிட்லர் ஏன் துணிந்து போரில் இறங்க மாட்டார்?

உலகத்தில் ஐந்தில் ஒரு பகுதியை கட்டி ஆண்டு வரும் பிரிட்டன், 'கணீர் கணீர்' என்று கேட்கும் படியாக, ராஜ தந்திரத் துறையில் வேலே செய்ய வேண்டாமா? 'காயப்படுத்த ஆசை; ஆனுல் அடிக்க அச்சம்' என்ற மனேபாவத்தோடு காரியம் செய்தால், அதற்கு பலன் என்ன விதமாக கிடைக்கும்? விபரீத பலன் தான் கிடைக்கும்.

தங்கள் சாம்ராஜயத்துக்கு விபத்து வந்துவிடப் போகிறதே என்று பயந்து பயந்து, பிரிட்டிஷ் தலேவர் கள் ராஜ தந்திரம் பழகலாமோ? உலக சமா தானத்தை காக்க வேண்டிய பொறுப்பு அவர்களிடம் தான் அதிகமாயிருந்தது. ஜெர்மனியும் ஜப்பானும் ரகசியமாக போர்த் தளவாடங்களே சேகரித்து, யுத்தத்துக்கு ஆயத்தமாக இருப்பது தெரியாமல் போயிற்றே என்று பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் புலம்பு வதைப் போல பேசினுர்கள். பிரிட்டிஷ் துப்பறியும் இலாகா எங்கே போயிருந்தது என்று கேட்க, யாருக் குத்தான் வாய் வராது?

மோசம் போனேன் என்று கூச்சலிடுவது முட்டாளின் வேலே. பிரிட்டிஷ் ராஜ தந்திரம் அடுத்து அடுத்து மோசம் போனதைக் காண யாருடைய மன துக்குத் தான் துக்கமா யிருக்காது?

1940-ம் வருஷம் செப்டம்பர் மாதம், பிரான்ஸ் படுதோல்வி அடைந்து, வீழ்ந்து விட்டது. உடனே, ஜப்பான் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் விரோத மாக, அச்சு நாடுகளில் ஒன்ருகி விட்டது. ஜப்பானுக்கு, இந்தோ-சீனுவின் பேரில் குறி. அதன் லக்ஷியம் 1941-ம் வருஷத்தில் கை கூடிற்று. அந்த வருஷமே, ஜப்பான் பிரஞ்சு இந்தோ-சீனுவை கைப் பற்றிக் கொண்டது.

இந்த அடாத செயல்களிலிருந்து, ஜப்பானுடைய நோக்கம் தெளிவு படவில்லேயா? ஜப்பான் மலேயாவை நிச்சயமாகத் தாக்கும் என்று பிரிட்டிஷ் அரசியல் நிர்வாகிகளுக்கு தெரிந்திருக்க வேண்டாமா? பல கோடி ரூபாய்களே விழுங்கிய சிங்கப்பூர்த் தளத்தை நம்பியும் ஜப்பானுடைய போர்த்திறனே மட்டமாக மதித்தும், பிரிட்டிஷார் உறங்கிக் கொண்டிருந்தார்கள். ஜப்பானிடம் புது மாதிரி விமானங்கள் இல்லே என்றும் ஜப்பானிய பைலட்டுகளுக்கு சரியாக விமானம் ஓட்டத் தெரியாது என்றும் ஜப்பானுக்கு அதிகமாக விமானங்கள் கிடையாது என்றும் எண்ணி, அவர்கள் ஏமாந்து போனுர்கள்.

எனவே ஜப்பானே எதிர்க்க, போதிய ராணுவ பலம் இருக்கிறதா என்று பார்லி மெண்டில் கேட்டதற்கு, ஓ! இருக்கிறது என்று படா டோபத்துடன்

பதில் சொன்னுர்கள். ஆனுல், கதை வேருக முடிந்தது. எதிரி சிங்கப்பூரில் குண்டு வீசிய காலத்திலும், டப் கூப்பர் உள்ளிட்ட சாம்ராஜ்ய வெறி பிடித்தவர்கள் குடித்து, நர்த்தனம் செய்து கொண்டு, களியாட்டத்தில் ஆழ்ந்து கிடந்தார்களாம் !

1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் வரையில், ஜப்பான் போரில் இறங்காமல், காத்துக் கொண்டிருந்தது. ரஷ்யாவின் பேரில் ஹிட்லர் படை எடுத்து, முன்னேறிக் கொண்டே போனுர்.

7

ரஷ்யா தோல்வி அடைந்துகொண்டே இருந்தது. இந்த தருணத்தில், ஜப்பானிலிருந்து, குருஸு என்ற விசேஷ தூதர் அமெரிக்காவுக்குப் போனுர். எதற்காக போனுர் ? ஜப்பான் சரியான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா, ஜப்பானுக்கு எச்சரிக்கை செய்ததன் பேரில், நல்ல முறையில் ராஜி பேசுவதைப் போல பாவனை செய்து, ஜப்பான் விசேஷ தூதரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தது.

அதன் நோக்கம் சமாதானப் பேச்சல்ல என்பது அதனுடைய துரோகச் செயலிலிருந்து பின்னுல் தெரிந்தது. ஜப்பானுடைய தூதர், நாள் கடத்திக் கொண்டே, சமாதானப் பேச்சு பேசிக்கொண்டு வந்தார்.

திடீரென்று 1941-ம் வருஷம் டிசம்பர்மீ 7உ அமெரிக்கா, திகைத்துப் போகும்படியான சேதியைக் கேட்டது. அதுதான் 'பேரல் துறை முக' சம்பவம்.

யுத்த அறிவிப்பு எதுவும் இல்லாமல், 200 ஜப்பானிய விமானங்கள் பெரல் துறை முகத்தைத் தாக்கி, அமெரிக்காவுக்கு ஏராளமாக நஷ்டத்தை உண்டாக்கிற்று.

மிட்வே, வேக், குவாம் முதலிய அமெரிக்கத் தீவுகளையும் இதே காலத்தில் ஜப்பான் தாக்கிற்று. டச்சு கிழக்கு இந்தியத் தீவுகள், ஹாங்காங், போர்னியோ, சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் ஜப்பானிய விமானிகள் வெடி குண்டுகளை வீசினுர்கள்.

நவீனப் போர் முறையில், யுத்த அறிவிப்புப் பிரகடனம் தேவை இல்லை போலும்!

ஜப்பானுடைய துரோகச் செயல் மிகவும் மிருகத்தனமான செயல் என்பதில் சந்தேகமில்லை. ஹிட்லர் ஐரோப்பாவிலும் ஜப்பான் ஆசியாவிலும் உலக ஆதிக்கத்துக்காக திட்டம் போட்டிருக்கிறுர்கள் என்பது 1938-ம் வருஷமே, கார்டல் ஹல்லுக்குத் தெரியும் என்று சில நாட்களுக்கு முன் வெளிவந்த அமெரிக்க அறிக்கையில் காணக் கிடக்கிறது.

எனவே, ஜப்பானுடைய துரோகச் செயலை, அமெரிக்கா எதிர்பார்த்து, தக்க பந்தோபஸ்து எடுத்துக் கொண்டிருக்க வேண்டாமா? அமெரிக்காவிலுமா மந்தமதி உலவ வேண்டும்?

'எதற்கும் தயாராக இருக்கிறோம்' என்று சொன்ன அமெரிக்க அட்மிரல்களும் ஜெனரல்களும், 'நாங்கள் தயாராயிருக்க வில்லை' என்று பின்னர் சொன்னுல், அது எப்படி இருக்கிறது? அதுவும்

இரண்டு வருஷகாலமாக அச்சு நாடுகளின் போர் முறையை நன்கு கவனித்து வந்த பிறகும்!

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதிகளேப் பிடித்து தோங் திரை செய்யும் மனப் பிராந்தி, அமெரிக்கர்களேயும் பிடித்துக் கொண்டதுதான் ஆச்சரியமா யிருக்கிறது. உலக ஆதிக்கத்துக்கு, ஜப்பான் முஸ்தீப்புகள் செய்து கொண்டு வருகிறது என்று அமெரிக்க முக்கியஸ்தர் களுக்கு 1938-ம் வருஷத்திலேயே, தெரிந்திருக்கு மாகில், அமெரிக்கா எந்த நிமிஷமும் உஷாராக இருக்க வேண்டாமா? யானேயின் பேரில் சவாரி செய்கிறவன், சுண்ணும்பு கேட்கும் மதோன்மத்த மனேபாவம் அமெரிக்கர்களுக்கு எப்படி வந்தது என்றுதான் தெரியவில்லே. பணச் செழிப்பும் நிறச் செருக்கும் அவர்களே அவ்வாறு செய்து விட்டதோ, என்னமோ!

குறி வைத்திருந்த இடங்களிலெல்லாம் 1941-ம் டிசம்பர்மீ 7உ ஞாயிற்றுக்கிழமை, ஜப்பானிய விமானிகள் வெடி குண்டுகளே வீசி, ஆயிரக்கணக்கில் நிரபராதிகளேக் கொன்று, பல போர்க் கப்பல்களே நாசம் செய்து, யுத்த தளவாடகளேக் ஏராளமாக அழித்த பின்னர், மறுநாள், ஆற அமர, மிக்காடோ பிரிட்டன் பேரிலும் அமெரிக்காவின் பேரிலும் போர் என்று பிரகடனம் செய்கிருர்.

நாகரிக மில்லாமல் காட்டு மிராண்டிகள் உலகில் நடமாடிய காலத்தில் கூட, அறிவிப்பில்லாமல் போரைத் துவக்கியதே இல்லே. இது ஹிட்லர் கண்டுபிடித்த உபாயம். ஆனுல் அவர் கண்டு பிடித்தது தொத்து நோய் போல உலகத்தில் பரவி விட்டது.

இந்த மாதிரியான யுத்த தர்மத்தை அடிவயிற்றி லிருந்து ஆக்ஷேபித்த நேசக் கக்ஷியாரே, பின்னர் இதை கைக் கொள்ளும்படி நேர்ந்தது காலத்தின் கொடுமை என்றுதான் சொல்ல வேண்டும். நேசக் கக்ஷியார் ஐஸிலாந்து தீவை கைப்பற்றியதும் பிரிட்டன் ஓரானைத் தாக்கியதும் பிரிட்டன் மாடகாஸ்கர் தீவை பிடித்துக் கொண்டதும், ஹிட்லரின் புதிய போர் முறையைத் தழுவித்தான்

அறிவிப்பில்லாமல் தாக்கினுல்தான், வெற்றி கிடைக்கலாம் என்பது நவீன போர் நிபுணர்களின் கருத்துப் போலும்! தூங்குகிறவன் தலையிலே, கல்லைப் போடுவது மகத்தான பாபம் என்பது நவயுகத்தின் தர்மமல்ல.

பாஸிஸ்ட் முறையைத் தழுவி, வாழ்க்கையையும் அரசியலையும் நடத்த வேண்டும் என்ற எண்ணம், ஜப்பானில் 1933-ம் வருஷத்திலேயே உருவெடுத்தது. அவ்வாறு உரு எடுத்ததுதான் தாமதம்; அதை அமுலுக்குக் கொண்டுவர, உடனே ஏற்பாடு நடைபெற்றது. 1938-க்குள், இது பக்குவமடைந்து முடிவு அடைந்து விட்டது. போருக்கு தோதாக இருக்கும் படியாக, தொழில்கள் அனைத்தும் அமைக்கப்பட்டு இணைக்கபட்டன.

போர்த்தளவாடங்களை எவ்வளவு விரைவில், நெருக்கடி காலத்தில், செய்யமுடியும் என்பதுதான் தொழில் சாலைகளின் நோக்கமாக இருக்க வேண்டும் என்று தொழில் சாலை நிர்வாகிகளுக்கு அரசாங்கத்தாரால் அறிவிக்கப்பட்டது. இந்த நோக்கத்தைக்

கொண்டு, தொழில் சாலேகள் அமைக்கப் பட்டதும், ஜப்பான் எந்த நிமிஷத்திலும் போருக்கு ஆயத்தம் என்று சொல்லத் தேவை இல்லே.

1941-ம் வருஷம் ஜப்பான் போரில் இறங்கினுலும், அதற்கு பூர்வாங்கமான எல்லா ஏற்பாடுகளேயும் சந்தேகமற செய்து முடித்துக் கொண்டது. பஸிபிக் சமுத்திரத்தை ஒட்டி இருக்கும் நாடுகளில் எல்லாம், ஜப்பானிய ஸ்தானீகர்களேயும் ஏஜண்டுகளேயும் நியமித்தார்கள். இவர்களுக்கு உளவுதான் வேலே.

அந்தந்த நாடுகளில் இருக்கும் அதிருப்தியையும் கலக்கத்தையும் விருத்தி செய்வது இவர்களின் முக்கியமான அலுவலாக இருந்தது. அதாவது, அந்தந்த நாடுகளில், சமயத்துக்கு உதவும்படியாக, ஐந்தாம் படைப்பேர் வழிகளே, உண்டாக்கிக் கொண்டு, அவர்களுக்கு எல்லா வகைகளிலும் ஒத்தாசை செய்து கொண்டு வந்தார்கள்.

ஜப்பான், ராணுவ முறையில் அந்த நாடுகளில் நுழைந்ததும் ராணுவத்துக்கு வழிகாட்ட ஐந்தாம் படை ஆட்கள் தயாராய்க் காத்து கொண்டிருந்தார்கள். ஜப்பான் ஆசிய நாடுகளின் நண்பன் என்று ஐந்தாம் படைகள் பிரசாரம் செய்து வந்தார்கள். ஏற்பாடுகளில் முதலாவது இதுதான்.

1940-இல் பிரான்ஸ் விழுந்ததும், இந்தோ சீனுவைக் கைப்பற்ற ஜப்பான் சூழ்ச்சி செய்தது. இந்தோ சீனுவில் ஜப்பானுக்கு சில சலுகைகள் இருக்க வேண்டும் என்று ஜப்பான், இந்தோ சீனுவின் கவர்னர் ஜெனரல் கத்ரூவுக்கு கண்டிப்பாக உத்தரவு அனுப்

பிற்று. ஜப்பானை எதிர்க்க, கத்ருவுக்கு ஆசை. சிங்கப்பூரிலிருந்த பிரிட்டிஷ் பிரதிநிதியிடம் உதவிக்காக கேட்டார். பிரிட்டன் உதவி செய்ய மறுத்து விட்டது.

டன்கர்க் விபத்தினுல் மதிமயங்கிப் போன பிரிட்டனுக்கு, இந்த தருணத்தில் செய்யும் காரியம் இது தான் என்று மட்டுப்பட வில்லை போலும். விச்சி சர்க்காரோடு, ஹிட்லர் குரங்குமத்தியஸ்தம் செய்து, இந்தோ சீனுவை, ஜப்பானின் ஆதிக்கத்துக்கு உட்படுத்திவிட்டார்.

இந்தோ-சீனுவை, பெரிய ராணுவ தண்டாக, ஜப்பான் அமைத்துக் கொண்டது. அதனுடைய ரோடுகள், விமானக் கூடங்கள், ரயில் பாதைகள், எல்லால் ஜப்பானுக்கு தோதான சாதனங்களாக ஆகி விட்டன. ஜப்பானுக்கு நிலக்கரி, ரப்பர், அரிசி, துத்தநாகம், தோல்கள், இரும்புத் தூள்கள்—இவைகள் இந்தோ-சீனுவிலிருந்து ஏராளமாக கிடைத்தன. இந்தோ-சீனுவுக்கு 60000 ஜப்பானிய ஸோல்ஜர்கள் வந்து சேர்ந்தார்கள். ஜப்பானுடைய முதலடி, பொறி தட்டினது போன்ற அடியாகும்.

அடுத்தாற் போல, தாய்லாந்து (ஸயாம்) ஜப்பானுடைய சூழ்ச்சிக்குள் அகப்பட்டுக் கொண்டு, ஜப்பானுக்கு எல்லா வகைகளிலும் உதவி செய்ய ஒப்புக் கொண்டது. தாய்லாந்திலிருந்து, வெள்ளீயம், தேக்கு, ரப்பர், அரிசி, மிகுதியும் கிடைத்தது. தாய்லாந்தின் விமானக் கூடங்கள், ராணுவ தளங்கள் ஜப்பானுடைய உபயோகத்துக்கு கிடைத்தன.

தாய்லாந்திலிருந்து தான், ஜப்பான் மலேயாவின் பேரில் பாய்ந்தது.

8

மலேயாப் போரை குறிப்பிடும் பொழுது, மனதுக்கு ரொம்ப துக்கமாயிருக்கிறது. முதலிலே, இரண்டு அசுரப் போர்க்கப்பல்கள் எளிதிலே பலியாயின. விமானம்தூக்கி கப்பலின் உதவி யில்லாமல், இந்தக் கப்பல்கள், எதிரியின் பிரதேசத்தில் வெகுதூரம் சென்றது தவறு என்று நிபுணர்கள் சொல்லுகிறுர்க்ள். இது பெருந் தவறுதான்.

மலேயாவின் வட கோடி விமான தளம் கோடாபாரு. இதைக் காப்பதற்கு, இருபது பேர்கள்தான் அங்கே வைக்கப் பட்டிருந்தார்கள். எவ்வளவு வெட்கக்கேடான ஏற்பாடு! ஜப்பானின் திறனே கேவலமாக நினைத்து, எடுத்துக்கொண்ட ஏற்பாடு இது! 500 மைல் நீளமுள்ள மலேயாவை, வெகு விரைவில் ஜப்பான் பிடித்துக் கொண்டது.

மலேயாவில் ராணுவ முஸ்தீப்புகள் யாவும் சரியானபடிக்கும் போதுமான அளவுக்கும் இருக்கின்றன என்று கம்பீர சனி பிடித்தது போல, பேசப் பட்டது என்ன ஆயிற்று? பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் இந்தியர்களுக்கு தாதுபுஷ்டியாக சொல்லுவதை ஜப்பான் கேட்டு ஏமாறவில்லே.

சிங்கப்பூர் பாதுகாப்பைப் பற்றி, அதிகம் சொல்லாமல் இருப்பதே நலம். ஏழு நாட்களில் சிங்கப்பூர் சரண் அடைந்தது! எதோடு? 75000 துருப்புகளோடு!

ஏராளமான போர்த் தளவாடங்களோடு! 'பிரிட்டிஷ் ராணுவத்துக்கு இதைப்போன்ற பெரிய விபத்து நேர்ந்ததே இல்லை' என்று சர்ச்சில் வருத்தப்பட்டார். நடந்தபின் வருத்தப்பட்டு என்ன பயன்?

'மலேயாவி லிருந்த பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் தலைக்கனம் கொண்டார்கள். புத்திசாலித் தனத்தோடு நடத்துவதற்கு, தலைவர் யாருமே இல்லை. நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் உயிருள்ள சம்பந்தமே கிடையாது. மிகவும் மோசமான அரசியல் நிர்வாகம்' என்று லண்டன், 'டைம்ஸ்' எழுதிற்று.

ரப்பர் முதலியவைகள் அழிக்கப்படவே இல்லை. இவைகள் எல்லாம் 'லட்டு' மாதிரி, ஜப்பான் கைக்கு கிடைத்துவிட்டன. அழிப்பதற்கு, லண்டனி லிருந்து, உத்தரவு வருவதற்காக காத்துக்கொண் டிருந்தார்களாம்! மலேயாவில் வாழ்ந்த மக்கள், திக்கற்ற நிலைமையில், இவைகளை வேடிக்கைப் பார்த்துக்கொண் டிருந்தார்களாம்! அடிமைகளாக வாழும் அவர்கள் வேறு என்ன செய்யமுடியும்?

'மக் ஆர்தர் பிலிபைன் தீவுகளில் செய்ததுபோல, மலேயாவிலும் சுதேசி துருப்புகளை பயிற்சி செய்திருக்கலாம். ஆனால், விஸ்கி குடிக்கும் தோட்ட முதலாளிகளுக்கும் சாசுவதமாக அங்கே தரிக்காத ராணுவப் 'பறவைகளுக்கும்' சுதேசிகள் என்ற கூட்டத்தார் இருப்பதாக நினைவு இல்லை. இவர்களே, சுதேசிகளை ஜப்பானியர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள்' என்று 'டெயிலி எக்ஸ்பிரஸ்' பத்திரிகை ஆத்திரத்தோடு எழுதிற்று.

மலேயா எளிதிலே எதிரிவசம் போய்ச் சேர்ந்தது. பர்மாவும் இப்படியே என்று சொல்லிவிடலாம். ஆனால் மலேயாவுக்கும் பர்மாவுக்கும் இடையே சில வித்தியாசங்கள் இருந்தன. மலேயாவில், சுதேசிகள், பிரிட்டிஷாரோடு சேர்ந்து, ஜப்பானை எதிர்க்க ஆவலுடன் இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு போர்ப் பயிற்சி இல்லை.

பர்மாவிலோ, ஜனங்கள் ஜப்பானுக்கு சாதகமாயிருந்தார்கள். பாதி-பாதி என்று பிரிட்டிஷ் கவர்னர் சொன்னார். பாதி-பாதி என்பது உண்மையாயின், பர்மா அவ்வளவு விரைவில் எதிரியின் வசம் போயிருக்க முடியாது. பர்மாவிலும் பிரிட்டிஷ் ராஜதந்திரம் தவறான பாதையில் சென்றது. பர்மாவின் செல்வ நிலையை முன்னேறச் செய்யவும் திறம்பட அரசியல் நிர்வாகம் செய்யவும் எண்ணி, பிரிட்டிஷார், இந்தியர்களை பர்மாவுக்கு அழைத்தார்கள்.

பின்னர், பர்மியர்களுக்கு இந்தியர்களின் பேரில் வெறுப்பு வரும்படியான நிலைமையை, பிரிட்டிஷ் முதலாளிகளும் ராஜ தந்திரிகளும் உண்டாக்கினார்கள். ஆனால், பிரிட்டிஷார் பர்மியர்களையும் நம்பவில்லை. அவர்களுக்குள் கக்ஷிப்பிளவுகளை உண்டாக்கி, காலம் தள்ளப் பார்த்தார்கள் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள். நெருக்கடியில், இது பயன்படாமல் போயிற்று. பர்மிய பிரதம மந்திரி யூ-ஸாவை கைதுசெய்தது, பர்மியர்களுக்கு பிடிக்கவில்லை. தங்கள் ஆத்திரத்தையும் வருத்தத்தையும் காண்பிப்பதற்காக, அவர்கள் யோசனை யின்றி, ஜப்பானோடு சேர்ந்து கொண்டால், அதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

இவ்வளவு அசட்டுத்தனமான போராட்டத்தில், பிலிபைன் தீவுகளின் எதிர்ப்பு மெச்சத்தக்கது. டச்சு கிழக்கு இந்தியத் தீவுகளிலும், டச்சுக்காரர்கள் தங்களால் கூடுமான வரையிலும் எதிர்த்துப் போராடினுர்கள். ஆனுல், பிலிபைன் எதிர்ப்பைப் போல அவ்வளவு உயர்ந்த ரகம் கொண்டதல்ல. பிலிபைனில் தைரியசாலியும் சாகஸக் காரரும் போர் நிபுணருமான ஜெனரல் மக் அர்தர் எதிர்ப்பை திறமையுடன் நடத்திவந்தார். ஜனநாயக உலகம் அவரை வாழ்த்தாமல் இருக்கமுடியாது.

ஜப்பான் அந்தமானை கைப்பற்றிக் கொண்டது. அங்கிருந்து வந்து, சென்னையிலும் கொழும்பிலும் விமானங்கள் வெடி குண்டுகளை வீச சாத்தியமாயிருக்கிறது.

இந்த நாடுகளை ஜப்பான் கைப்பற்றி, சுமார் இரண்டு வருஷங்கள் ஆகின்றன. இது வரையிலும் அது ஆஸ்டிரேலியாவின் பேரிலும் இந்தியாவின் பேரிலும் படை எடுத்து தாக்கவில்லை. இந்த இரண்டு வருஷங்களாக, அது ஏன் அவ்வாறு செய்யவில்லை ? செய்ய மனமில்லையா ? அல்லது தென்பு இல்லையா ? படை எடுப்பினுல், லாபம் எதுவும் இல்லை என்று கணக்குப் பார்த்து, அந்தக் கருத்தை அடியோடு உதறித் தள்ளிவிட்டதா ? உலக ஆதிக்கத்தை விரும்பும் ஜப்பான், இந்தியாவை விட்டுவிடுமா ? வெகு காலம் விட்டு வைக்குமா ?

ஆகாரம் சம்பந்தப்பட்ட வரையில், ஒரு நியதி உண்டு. ஜீரணம் ஆகக்கூடிய அளவுக்குத்தான் உண

வைச் சாப்பிட்முடியும். உட்கொண்ட ஆகாரத்தை, ஜீரணம் செய்யதக்க ஏற்பாடுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், போரை, அனுமார் வால் நீண்டு கொண்டு போனதைப் போல, நீட்டிக்கொண்டே போகமுடியாது. ஜப்பானிலிருந்து இந்தியா சுமார் எண்ணுயிர மைலுக்கு அதிகமாயிருக்கும். இவ்வளவு நீளத்தில், ஜப்பானில் இருந்து கொண்டே, அது போரை நடத்த முடியாது.

பிடித்த நாடுகளை செப்பனிட்டு, அவைகளை போர்த்தளங்களாக அமைத்துக் கொண்டால் தான், நீளத்தை குறைக்க முடியும். மேலும் ஜெயித்த நாடு களில், எதிர்ப்பு இல்லாமல் பார்த்துக்கொண்டு, அந்த நாடுகளி லிருந்து மூலப்பொருள் வசதிகளை தேடிக் கொண்டால்தான், போரை நீடித்து நடத்த முடியும்.

பர்மா முதல் ஆஸ்டிரேலியா வரையிலு முள்ள நாடுகளையும் தீவுகளையும் ஜப்பான் ஜெயித்துவிட்டது. இந்த நாடுகளில் சுமார் ஐந்து லக்ஷம் ஜப்பானியத் துருப்புகள் இருக்கின்றன. துருப்புகள் இருந்தால் மட்டும் போதாது. ஸிவில் அரசியல் நிர்வாகத்துக்கு, ஊர்ப்பட்ட ஆட்கள் தேவை. இந்த எண்ணிக்கையை ஜப்பான் கண்டு பிடிக்க வேண்டும்.

இவர்களைக் கொண்டு, ஜெயித்த நாடுகளை செப்ப னிட வேண்டும். இது லேசான வேலை அல்ல. சீனவில் ஜப்பானது ஆதிக்கத்துக்கு உட்பட்ட பிரதேசங் களில், இன்னமும் குரங்குப் போர் நடந்து வருகிறது. சீனர்கள் தங்கள் ரோஷத்தை விடாமல், இன்னும் அந்தப் பிராந்தியங்களில் எதிர்த்துப் போராடுகின்ற

னர். அந்த மாதிரி, வேறு பிரதேசங்களில் நிகழ்வதாகத் தெரியவில்லை. பிலிப்பைனிலும் மலேயாவிலும் சிறிது எதிர்ப்பு இருப்பதாக முதன் முதலில் சேதி வந்தது. அவ்விரு பிராந்தியங்களிலும் இப்பொழுது எவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது என்று தெரியவில்லை.

ஜப்பான் ஜெயித்த நாடுகளிலிருந்து, அதற்கு கிடைத்திருக்கும் மூலப் பொருள்களின் ஜாப்தாவைப் பார்த்தால், பிரமை தட்டிப் போகும்படியாக இருக்கிறது. ஜப்பானுக்கு கிடைத்திருக்கும் பொருள் களாவன :—

	டன்கள்.
இரும்பு	4,500,000
எண்ணெய்	1,03,62,000
ஈயம்	1,09,000
தாமிரம்	81,000
மாங்கனீஸ்	1,00,000
ரப்பர்	8,86,000
கொப்பரை	13,38,000
ஸோயா பீன்	58,36,000
வெள்ளீயம்	1,17,300
டங்ஸ்டென்	15,000
அரிசி	3,07,52,000
ஆண்டிமனி	8,100
மாக்னிஸைட்	1,88,000
க்ரோம்	59,000
நிக்கல்	3,07,000
நிலக்கரி	7,34,14,000
துத்தநாகம்	78,000

இவைகளைத் தவிர, ஏராளமாக கொயினாவும் பஞ்சும் கிடைத்திருக்கின்றன. இந்த மூலப் பொருள் களை மிக்க கவனத்துடன் சேர்த்தால் தான், ஜப்பா னால் நீடித்த போர் நடத்த முடியும். எனவே, சென்ற இரண்டு வருஷங்களாக, அவைகளைச் சேர்ப்பதில், ஜப்பான் முனைந்திருக்கிறது என்று நினைக்க வேண் டும். தற்காப்புக்காக, அஸ்ஸாம் எல்லையிலும் ஆஸ்டி ரேலியாவிலும் அது அடிக்கடி தாக்கி வருகிறதே யல் லாமல், பெரும் படை எடுப்புக்கு பூர்வாங்க வேலை யாக அல்ல.

இந்த இரண்டு வருஷங்களாக, அமெரிக்கா சும்மா இருக்கவே இல்லை. அதுதான் ஜப்பானோடு மும்முரமாக போராடிக்கொண்டு வருகிறது. பர் மாவை திரும்ப ஜெயிக்கவேண்டும் என்று பிரிட்டி ஷார் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு தேவையானவைகளை தயார் செய்து கொண்டிருக்கி றார்களாம்.

ஹிட்லரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு கிடக்கும் ஐரோப்பிய நாடுகளைப்பற்றி பிரிட்டிஷ் ராஜ தந்திரி கள் பேசும்பொழுது, அந்த தேசங்களை விடுவிக்கவேண் டும் என்கிறார்கள். பர்மாவைப்பற்றி பேசுகையில், திரும்பி அதைக் கைப்பற்றவேண்டும் என்று சொல்லு கிறார்கள். வாசக வித்தியாசத்தை கவனித்தீர்களா ?

1941-ம் வருஷம் ஜப்பான் போரில் இறங்கு கையில், வெகு விரைவில், ரஷ்யா வீழ்ந்து விடும் என்று சொல்லும்படியாக, ஹிட்லரின் சேனைகள், ரஷ்யாவில் முன்னேறிச் சென்றன. பிரிட்டனோ, டன்கர்க் விபத்துக்குப்பின், மனவேதனைப் பட்டுக்

கொண்டிருந்தது. அமெரிக்கா, போருக்குத் தேவை யான எதையும் ஜரூராக செய்யவில்லை.

பிரிட்டனையும் அமெரிக்காவையும் ஒரே சமயத் தில் அடித்து வீழ்த்திவிடலாம் என்ற ஆசையை ஜப்பானுடைய உள்ளத்தில் தூண்டிய சந்தர்ப்பம் அது தான். துவக்கத்தில், ஜப்பான், பிரமிக்கத்தக்க வெற்றியை அடைந்தது என்பது உண்மை. ஆனல்— இந்த ஆனலைத்தான் கவனிக்க வேண்டும்.

1942-1943, இந்த வருஷங்களில் ஹிட்லரால் எங்கும் முன்னேற முடியவில்லை. ரஷ்யர்கள் ஸ்டா லின் கிராடை பாதுகாத்த வகை, அற்புதங்களிலும் அற்புதமாகும். ஜெனரல் அலெக்ஸாண்டர், டுனிசியப் போரில் காண்பித்த சாமர்த்தியம் மெச்சத்தக்கது. அமெரிக்கா, ஐரோப்பாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் தக்க தளவாடங்களுடன் பெருஞ் சேனைகளை அனுப் பும்படியான நிலைக்கு வந்துவிட்டது. ஸ்டாலின், வெற் றிக்கு மேல் வெற்றி அடைந்து வருகிறுர். இங்கிலீஷ் ஸ்பிட்பயர்களும் அமெரிக்க பறக்கும் கோட்டை களும் ஜெர்மனியின் மீது பறந்து சென்று, தொழில் சாலைகளை நாசமாக்கி வருகின்றன. மக் ஆர்தரோ, பக்கத்துக்கு பத்து முட்கள் தைப்பது போல, ஜப்பா னது வெளிக்கோட்டை அரண்களை தகர்த்துக் கொண்டே இருக்கிறுர்.

இன்றைக்கு போர் நிலைமை என்ன ? வட ஆப்ரிக் காவில் மருந்துக்கு ஒரு ஜெர்மானியனைப் பார்க்க முடி யாது. வட ஆப்ரிக்கா முழுதும் நேசக்கக்ஷியின் வசம் வந்து விட்டது. இத்தாலியில், முஸ்ஸோலினி, தலை

குப்புற வீழ்ந்து விட்டார். ரஷ்யாவில், ஹிட்லர், தனது சேனைகளை பதினுயிரக் கணக்கில் பலி கொடுத்தும், முன்னேற முடியாமல், பின்சென்று கொண்டே இருக்கிருர். துருக்கியிலே அவரது செல்வாக்கு குறைந்து வருகிறது.

ஜெர்மனிக்கு ஒத்தாசையாக இருக்கும் நேச நாடுகளில் ஏகப்பட்ட அதிருப்தி. முடிவான வெற்றியைக் காணுமல், எல்லா வகைகளிலும் நஷ்டப்பட்டுக் கொண்டிருக்க, அவைகள் மனம் கொள்ள வில்லை என்று தெரிகிறது. ஹிட்லர், இப்பொழுது, எல்லாப் போர் அரங்கங்களிலும் தற்காப்புப் போர் தான் நடத்தி வருகிருர். இதுதான் தற்போதைய போர் நிலைமை. இந்த நிலைமையில், ஜப்பான் இந்தியாவின் பேரில் படை எடுக்குமா ?

இந்தியா இப்பொழுது எப்படி இருக்கிறது? துயரத்திலும் ஏக்கத்திலும் ஆழ்ந்து கிடக்கிறது. அதன் உண்மைத் தலைவர்கள் காவலில் இருக்கிருர்கள். இந்தியா முழுதும் (பாஞ்சாலம் நீங்கலாக) உணவுக்கு நெருக்கடி. சென்னை மாகாணத்தில் விறகுக்கும் நெருக்கடி. வங்காளத்தில், பசி யமன் நாளொன்றுக்கு நூற்றுக்கணக்கில் பலிவாங்கி வருகிருன். ஜப்பானிய விமானங்கள், இந்திய வானத்தில், அடிக்கடி தோன்றி மறைகின்றன.

இப்படி யெல்லாம் துன்பங்களும் நோய்களும் இந்தியாவில் மலிந்து கிடந்தாலும், ஜப்பான் படையெடுப்புக்கு சாதகமாக முன்னணி வேலை செய்யக் கூடிய ஐந்தாம் படை இந்தியாவில் இல்லை. ஜப்பான்

காரன் ரொம்ப நல்லவன் என்று சில அசடுகள் பிதற்றிக்கொண்டிருக்கலாம். அவர்களுடைய பிதற்றல், கடலில் கரைத்த காயம் ஆகும். அதனுல், எத்தகைய விபரீதமும் விளையாது.

உள்நாட்டுக் கலக்கம் இருந்தால்தான் படை எடுப்புக்கு சாதகமாகயிருக்கும் என்று நெப்போலியன் சொல்லுவது வழக்கம். ஜப்பான் நம்பி வரும்படியான (தேசபக்தி யில்லாத) உள்நாட்டுக் கலவரம் இந்தியாவில் இல்லே. உலக ஆதிபத்தியம் என்ற பெரும் புகழுக்கு ஆசைப்பட்டு, ஜப்பான் இந்தியாவைத் தாக்கலாமே யொழிய, இந்தியாவினுல், அதற்கு வேறு எவ்வித லாபமும் கிடையாது. இந்தியாவை அடக்கி ஆள, அதனுல் ஒருநாளும் முடியாது.

ஹிட்லர், ரஷ்யாவை தரைமட்டப் படுத்தியிருந்தால், ஜெர்மனி மேற்கே யிருந்தும் ஜப்பான் கிழக்கே யிருந்தும் இந்தியாவின் பேரில் படை எடுத்து வந்திருக்கலாம். அந்த ஆசையும் காலமும் மலேஏறி விட்டன. எனவே, ஜப்பான் இந்தியாவை சொர்ப்பனத்தில் காணலாம்; போர்க்களத்தில் காணப் பார்ப்பது அதன் முட்டாள் தனத்தை பகிரங்கப் படுத்திக் கொள்ளுவதாகும்.

அமெரிக்கா, ஜப்பானுக்குச் சொந்தமான தீவுகளில் இறங்கி தாக்கும்படியான நிலைமைக்கு முன்னேறி வந்துவிட்டது. எனவே, அமெரிக்காவை சமாளிப்பது தான், ஜப்பானுக்கு இனிமேல் வேலையாக இருக்கமுடியும்.

ஜெர்மனிய ஸப்மாரின் தொல்லை குறைந்து வருகிறதாம்! அப்படியாயின், பிரிட்டிஷ் கடல் படையில் ஒருபகுதி, இந்துமகா சமுத்திரத்துக்கு வரலாம். கடல் மார்க்கமாக, ஜப்பான் இந்தியாவைத் தாக்க முயலுவது முயல்கொம்பு வேட்டையாக முடியும்.

ஹிட்லர் வீழ்ந்து விட்டால், ஜப்பான் நசுங்கிப் போவது நிச்சயம். அதை எதிர்பார்த்து, இப்பொழுது முதற்கொண்டே, ஜப்பான் தற்காப்பு வேலையில் இறங்கி, அதை செவ்வனே செய்து முடிப்பதற்குத் தான் முயலும்.

ஜப்பான் இந்தியாவுக்கு வரும் என்று தோன்றவில்லை ; சுபாஷ்போஸ் எங்கிருந்து வேண்டுமானாலும் எச்சரிக்கை செய்யலாம். ஆனால் அது அமுலுக்கு வரக்கூடியதல்ல என்றே தோன்றுகிறது.

ஆனால் பிரிட்டிஷ் ராஜ தந்திரம் எத்தனையோ விபரீத வித்தைகளை இதுவரையிலும் செய்திருக்கிறது. சாம்ராஜ்யம் என்று சதா ஜபித்துக் கொண்டிருக்கும் சர்ச்சிலும் அவரைச் சேர்ந்தவர்களும் ராஜ தந்திரத்தில் ஜால வித்தை செய்து, உலகத்தில் பல பகுதிகளில் நேசக்கக்ஷியாரின் பேரில் வெறுப்பு உண்டாகும்படி செய்து, ஜப்பானை இந்தியாவுக்குள் வரவழைத்து விட்டால், அதற்காக என்ன செய்ய முடியும் ?

பிரிட்டிஷ் ராஜ தந்திரத்தை நம்பி, திட்டமாக எதையும் சொல்ல முடியாது. சாம்ராஜ்ய வெறி இருக்கும் வரையில், பிரிட்டிஷ் ராஜ தந்திரம், தவ

ருன பாதையில் தான் சென்று கொண்டிருக்கும். அதன் எதிர் பாராத தீமைகளை இந்தியாவும் உலக மும் இன்னும் சிறிதுகாலம் அனுபவித்துதான் தீர வேண்டும்.

கல்கத்தாவில், சில தினங்களுக்கு முன் ஜப்பா னிய விமானங்கள் பட்டப் பகலிலேயே கூட்டமாக வந்து,வெடி குண்டுகளை வீசியிருக்கின்றன. இது நேர்ந்தும், ஜப்பான் இந்தியாவின் பேரில் படை எடுத்து வராதா என்று கேட்கலாம்.

குண்டு வீசுதல், நரம்புத் தளர்ச்சியையும் திகிலை யும் உண்டாக்குவதற்காக செய்யப் பட்டதாக தோன்றுகிறதே யல்லாமல், படை எடுப்புக்கு பூர் வாங்கமான வேலையாக தோன்றவில்லை.

அஸ்ஸாமிலும் வங்காளத்திலும் இந்தியாவின் கீழ்கரையோர நகரங்களிலும் ஜப்பானிய விமானி கள் வெடிகுண்டுகளை வீசி, இந்தியர்களுக்குள் திகிலை உண்டாக்கவும் பரப்பவும் பார்க்கலாம். ஆனல் படை எடுப்பு சாத்தியமில்லை என்ற முடிவுக்குத்தான் வர முடிகிறது.

ஏற்கனவே, குறிப்பிட்டதைப் போல, பிரிட்டிஷ் ராஜ தந்திரம் அற்புதமான ஜாலவித்தை செய்து, படை எடுப்புக்கு, ஜப்பானுக்கு தூண்டுதலை உண் டாக்கிக் கொடுத்தால், யார் என்ன செய்ய முடியும்?

2209

இசைத்தமிழ்

இசையைப் பற்றிய ஆராய்ச்சி நூல்

நாமக்கல்

இராமலிங்கம் பிள்ளை

விரைவில் வெளிவரும்

தற்காலப் பிரச்னைச் சுடர்

வருட சந்தா ரூ. 6

வருட சந்தாதாரர்களுக்குத் தபால் செலவின்றி புத்தகங்கள் மாதாமாதம் அனுப்பப்படும்.

பிரார்த்தனை

நாமக்கல் கவிஞர்
இராமலிங்கம் பிள்ளை
அவர்கள் குழந்தைகளுக்காகப்
பாடிய
பிரார்த்தனை கீதங்கள்

விலை 8 அணா

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர் — சென்னை

Cover Designed & Printed by P. A. S. Press, Post Box 349
Mount Road, Madras

ஆடும் பாலம்

தஞ்சை

ஆத்மநாதன்

எழுதிய அற்புதமான

சிறு கதைகள்

விரைவில் வெளிவரும்

தமிழ்ப் பண்ணை

தியாகராயநகர்-சென்னை